## திடீர் மரண விசாரணை அலுவலர்களுக்கான நிலையியல் நடவடிக்கைமுறை கோவை.

### 01. சட்டரீதியான சட்டகம்

1979 இன் 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைக் கோவை சட்டத்தின் ஏற்பாடுகளின் 108 ஆம் பிரிவின் கீழ் திடீர் மரண விசாரணை அலுவலர்களை நியமனம் செய்யும் தத்துவம் கௌரவ நீதி அமைச்சருக்கு சாட்டுதல் செய்யப்படுவதுடன், மேற்படி சட்டத்தின் XI மற்றும் XXX அத்தியாயங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய திடீர் மரண விசாரணை அலுவலர்கள் தமது கடமைகளை நிறைவேற்றல் வேண்டும்.

### 02. நியமனத்தின் தன்மை

I. திடீர் மரண விசாரணை அலுவலர் பதவி சம்பளம் செலுத்தப்படும் பதவியொன்றல்ல என்பதுடன் கௌரவ பதவியொன்றாகும். எவ்வாறாயினும், மரண பரிசோதகர்கள் மேற்கொள்ளும் மரண பரிசோதனைகளுக்கு தாபன விதிக் கோவையின் X ஆம் அத்தியாயத்தின் 3 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய (நீதி அமைச்சின் சுற்றறிக்கை இலக்கம் 03/2019), உரிய மேல் நீதிமன்றங்களின் ஊடாக கொடுப்பனவுகள் செலுத்தப்படும்.

II. திடீர் மரண விசாரணை அலுவலர்கள் அரசாங்கத்தின் சம்பளம் பெறும் வேறு எந்தவொரு பதவியிலும் சேவையாற்ற முடியாது என்பதுடன், அலுவலக நேரங்கள் மற்றும் அரசாங்க லீவு நாட்களை பொருட்படுத்தாது முடியுமான எல்லாச் சந்தர்ப்பத்திலும் தமது சேவையைப் பெற்றுக் கொடுத்தல் வேண்டும்.

III. திடீர் மரண விசாரணை அலுவலர்கள் தமது கடமையை நிறைவேற்றுவதற்குப் பதிலாக எந்தவொரு வெளித்தரப்பினரிடமிருந்தும் எந்தவொரு பயனையோ அல்லது நிதியையோ பெற்றுக் கொள்ள உரித்துடையவர்கள் அல்லர்.

### 03. நியமனம் செய்வதற்கான அடிப்படை தகைமைகள்

1. **திடீர் மரண விசாரணை அலுவலர் பிரிவுகளுக்கு நியமனம் செய்தல்.**

   I. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

   II. சிறந்த நன்னடத்தை உள்ளவராகவும், சிறந்த தேகாரோக்கியமுள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

   III. நியமனத்தை எதிர்பார்க்கின்ற திடீர் மரண விசாரணை அலுவலர் பிரிவில் கடந்த இரண்டு வருட காலப்பகுதியில் (02) நிரந்தரமாக வசிப்பாளராக இருத்தல் வேண்டும்.

   IV. 35 வயதுக்குக் குறையாதவராகவும், 60 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

   V. க.பொ.த. (உ.த.) பரீட்சையில் ஒரே தடவையில் 03 பாடங்களில் (சாதாரண பொதுப் பரீட்சை மற்றும் ஆங்கில மொழி தவிர) சித்தியடைந்திருத்தல். (ஆங்கில மொழி அறிவு,

தொழில்நுட்ப அறிவு மற்றும் க.பொ.த. உயர் தரப் பரீட்சையில் விஞ்ஞான பாடங்களில் சித்தியடைந்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.)

VI. கடமையாற்ற எதிர்பார்க்கின்ற மொழியில் தேர்ச்சி பெற்றிருத்தல்.

VII. நீதிமன்றத்தினால் தவறாளியாக்கப்பட்டவராக இருத்தலாகாது.

VIII. இதற்கு முன்னர் கௌரவ நீதி அமைச்சரினால் நியமனம் செய்யப்பட்ட யாதாயினுமொரு பதவியிலிருந்து பதவி நீக்கம் செய்யப்படாதவராக இருத்தல்.

IX. 1951 இன் 17 ஆம் இலக்க பிறப்பு மற்றும் இறப்புப் பதிவு செய்தல் சட்டத்தின் கீழ் நியமனம் செய்யப்படுகின்ற பிறப்பு மற்றும் இறப்புப் பதிவாளராக சேவையாற்றுவது இப்பதவிக்கு நியமனம் பெறுவதில் தகுதியீனமொன்றாக கருதப்படும்.

## 2. வைத்தியசாலைகளுக்கு திடீர் மரண விசாரணை அலுவலர்களை நியமனம் செய்தல்.

I. வைத்தியசாலை உரித்தான மாவட்டத்தின் ஒரு பிரிவில் திடீர் மரண விசாரணை அலுவலராக ஆகக் குறைந்தது மூன்று (03) வருடம் தொடர்ச்சியான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

II. ஒழுக்காற்று விசாரணை மூலம் தவறாளியாக்கப்பட்ட ஒருவராக இருத்தலாகாது.

III. சிறந்த ஆங்கில அறிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.

IV. திடீர் மரண விசாரணை டிப்ளோமாதாரியாக இருத்தல் வேண்டும்.

V. நீதி அமைச்சு / சுகாதார அமைச்சினால் நடாத்தப்படுகின்ற திறன் விருத்தி பயிற்சி செயலமர்வுகளில் பங்கேற்றுள்ள ஒருவராக இருத்தல் வேண்டும்.

## 3. பதவிக்கு நியமனம் செய்யும் முறையியல்.

I. வெற்றிடமான திடீர் மரண விசாரணை அலுவலர் அதிகாரப் பிரதேசங்களுக்கு வர்த்தமானியில் மற்றும் அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்படுகின்ற அறிவித்தல் மூலம் விண்ணப்பங்களைக் கோரல்.

II. அதற்கமைய, அடிப்படை தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்திய பின்னர் கௌரவ நீதி அமைச்சரின் அங்கீகாரத்தின் பேரில் நியமனம் செய்யப்படுவார்கள்.

## 04. பொறுப்புக்கள் மற்றும் செயற்பணி

I. நீதி அலுவல்கள் விடயப்பொறுப்பு கௌரவ அமைச்சரினால் கௌரவமான மற்றும் மிக்க பொறுப்புவாய்ந்த திடீர் மரண விசாரணை அலுவலர் பதவிக்கு ஆட்கள் நியமனம் செய்யப்படுவது திடீர் மரணமொன்று இடம்பெறுகின்ற சந்தர்ப்பத்தில் அது பற்றி துரிதமாக விசாரணைகளை நடாத்தி நீதிமன்றத்திற்கு உதவும் பொருட்டும், அதன் போது திடீர் மரணத்திற்கு ஆளான ஆட்களின் உறவினர்களுக்கு மேற்படி பூதவுடலை விரைவில்

கையளிப்பதற்கு திடீர் மரண விசாரணை அலுவலர்கள் நடவடிக்கை மேற்கொள்வார்கள் எனும் நம்பிக்கையுடனாகும்.

II. சுறுசுறுப்பாக, நியாயமாக மற்றும் பக்கச்சார்பின்றி, துல்லியமான விசாரணையுடன் இந்த சிபாரிசுகளை நீதிமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்கு திடீர் மரண விசாரணை அலுவலர்கள் சட்டத்தினால் கடமைப்பட்டுள்ளார்கள்.

III. திடீர் மரண விசாரணை அலுவலர் ஒருவர் என்ற வகையில் தகவல்களை அறிக்கையிடல் மற்றும் விசாரணை செய்வது தொடர்பாக உங்கள் மத்தியில் அதற்குரிய சட்டங்கள், விதிகள் பற்றிய பரந்தளவிலான புரிந்துணர்வு இருத்தல் வேண்டும்.

IV. ஒவ்வொரு திடீர் மரண விசாரணை அலுவலருக்கும் இந்த அமைச்சினால் விநியோகிக்கப்பட்டுள்ள செல்லுபடியாகும் காலஎல்லையை விஞ்சாதவாறான நியமனக் கடிதம் மற்றும் உத்தியோகபூர்வ அடையாள அட்டை காணப்படல் வேண்டும்.

V. ஒவ்வொரு திடீர் மரண விசாரணை அலுவலருக்கும் பதிவு தொடர் இலக்கம் வழங்கப்படுவதுடன், தமது கடமை நடவடிக்கைகளின் போது கட்டாயமாக மேற்படி இலக்கத்தைக் குறிப்பிடுதல் வேண்டும். தமது உத்தியோகபூர்வ முத்திரையில் மேற்படி இலக்கத்தைக் குறிப்பிடுவது பொருத்தமானதாகும்.

VI. நியமனம் வழங்கப்பட்டுள்ள காலஎல்லையை தாண்டிய பின்னர் கடமை நடவடிக்கைகளில் ஈடுபடுவதிலிருந்து தவிர்ந்திருத்தல் வேண்டும். சேவையை நீடிப்பது அவசியமாயின் நியமனக் காலஎல்லையை விஞ்சுவதற்கு குறைந்த பட்சம் மூன்று மாதங்களுக்கு முன்னர் எழுத்து மூலமான கோரிக்கையை அமைச்சின் செயலாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

VII. திடீர் மரண விசாரணை அலுவலர்கள் சட்டபூர்வமான காரணங்கள் இன்றி பூதவுடல்களை மரணித்தவரின் உறவினர்களிடம் கையளிப்பதை தாமதிக்கக்கூடாது. குறிப்பாக இஸ்லாம் சமயத்தின் அடிப்படையில் முஸ்லிம் ஒருவரின் பூதவுடலை 24 மணி நேரத்துக்குள் நல்லடக்கம் செய்ய வேண்டியுள்ளதனால் முஸ்லிம் இனத்தவர்களின் மரண விசாரணை தொடர்பில் முன்னுரிமை வழங்கி நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.

VIII. மரண விசாரணை நடாத்தும் திடீர் மரண விசாரணை அலுவலர்களின் பணி குற்றம் அல்லது தவறை விசாரணை செய்வதன்றி மரணத்துக்கான காரணம் மற்றும் அது இடம்பெற்றுள்ள முறை பற்றி நீதிமன்றத்திற்கு அறிக்கையிடுவதாகும்.

IX. திடீர் மரண விசாரணை பிரிவுக்குள் ஒரு மரணம் பற்றிய தகவல் கிடைத்தவுடன் உயிரிழந்த நபரின் உடல் உள்ள இடத்திற்கு உடனடியாகச் சென்று விசாரணை நடாத்துவது அத்தியாவசியமானதாகும். பூதவுடலை வேறு ஒரு இடத்திற்கு கொண்டு வருமாறு உறவினர்களுக்கு அறிவிப்புச் செய்வதை எவ்வகையிலும் செய்தலாகாது.

X. ஒவ்வொரு மரண விசாரணை தொடர்பாகவும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்தை (மாதிரிப்படிவ இலக்கம் 01) இரண்டு பிரதிகளாக தயார் செய்து மரண விசாரணை அறிக்கையுடன் ஒரு பிரதியை நீதவானிடம் சமர்ப்பிப்பதற்கும், மற்றைய பிரதியை திடீர் மரண விசாரணை அலுவலர் வசம் கோப்பிலிட்டு வைத்திருப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும். தம்வசம் வைத்திருக்கும் மாதிரிப்படிவத்தின்

பிரதிசை சமா்ப்பிக்கக்கூடியவாறு இந்த அறிக்கையை பாதுகாப்பாக வைத்திருப்பது அவா்களின் பொறுப்பாகும் என்பதுடன் பதவி விலகல், சேவையை நிறைவு செய்தல் இடம்பெறுகின்ற சந்தா்ப்பங்களில் மேற்படி பதவிக்கு நியமனம் பெறும் பதிலாளான திடீா் மரண விசாரணை அலுவலருக்கு குறித்த சகல ஆவணங்களையும் கோப்பிலிட்டு முறையாக மற்றும் எழுத்து மூலம் கையளித்தல் வேண்டும்.

XI. யாதாயினுமொரு மரணம் தொடா்பாக நீதிமன்ற மருத்துவ அலுவலரினால் பிரேதப் பரிசோதனை நடாத்தப்பட வேண்டுமா என்பதை தீா்மானிக்கும் பொறுப்பு திடீா் மரண விசாரணை அலுவலருக்குப் பொறுப்பளிக்கப்படும். நீதிமன்றத்தில் ஒரு வழக்குக்கு காரணமாக அமையக்கூடிய ஒவ்வொரு சந்தேகத்துக்குரிய மரணமும் மற்றும் வாகன விபத்து காரணமாக இடம்பெறுகின்ற மரணங்கள் மற்றும் குறித்த காரணத்தை கண்டறிய முடியாத மரணங்கள் மற்றும் அமைச்சின் சுற்றறிக்கை மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ள கட்டாயமாக பிரேதப் பரிசோதனை நடாத்த சமா்ப்பிக்கப்பட வேண்டிய மரணங்களை நீதிமன்ற மருத்துவ அலுவலா் ஒருவரிடம் சமா்ப்பிப்பது கட்டாயமான அம்சமாகும். நீதி அமைச்சினால் கோரப்படுகின்ற எந்தவொரு சந்தா்ப்பத்திலும் மேற்படி ஆவணங்களைப் பெற்றுக் கொடுக்க திடீா் மரண விசாரணை அலுவலா் கட்டுப்பட்டுள்ளாா்.

XII. பதிவாளா் நாயகம் திணைக்களத்தினால் அறிமுகம் செய்யப்பட்டுள்ள பீ18 மாதிரிப் படிவத்தை ஒவ்வெரு திடீா் மரண விசாரணைக்கும் பயன்படுத்த வேண்டும் என்பதுடன், அதன் மூலம் பிரதியை மரணத்தை பதிவு செய்யும் பதிவாளருக்கு பெற்றுக் கொடுக்கக்கூடிய வகையில் உறவினா்களிடம் கையளித்தல் வேண்டும் என்பதுடன், இரண்டாவது பிரதியை மேலதிக மாவட்ட பதிவாளரிடம் கையளித்தல் வேண்டும்.

XIII. ஒரு வைத்தியசாலைக்கு அனுமதித்த பின்னா் அல்லது வைத்தியசாலைக்கு கொண்டுவந்த பின்னா் உறுதி செய்யப்பட்ட மரணங்கள் பற்றிய திடீா் மரண விசாரணைகளை குறித்த வைத்தியசாலைக்கு நியமனம் செய்யப்பட்டுள்ள திடீா் மரண விசாரணை அலுவலா் ஒருவா் இருப்பாராயின் அவரினாலும், அவ்வாறு இல்லை எனில், மேற்படி வைத்தியசாலை உரித்தான அதிகாரப் பிரதேசத்தின் திடீா் மரண விசாரணை அலுவலரினாலும் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

XIV. யாதாயினும் திடீா் மரண விசாரணை பிரிவினுள் ஏதெனுமொரு மரணம் இடம்பெற்று அது பற்றிய பிரேதப் பரிசோதனைக்காக வைத்தியசாலையொன்றில் சமா்ப்பிக்கப்படும் பட்சத்தில் மேற்படி மரண விசாரணையை குறித்த மரணம் இடம்பெற்ற இடம் தொடா்பான திடீா் மரண விசாரணை பிரிவுக்கு உரித்தான திடீா் மரண விசாரணை அலுவலரினால் திடீா் மரண விசாரணை நடாத்தப்படல் வேண்டும்.

XV. தாய் மரணங்கள் தொடா்பில் நீதி அமைச்சின் சுற்றறிக்கை இலக்கம் 01/2014 மற்றும் 13/2018 இன் அறிவுரைகளுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.

XVI. ஒவ்வொரு மரண விசாரணையையும் நிறைவு செய்தவுடன் உரிய அறிக்கையை நீதவானிடம் சமா்ப்பித்தல் வேண்டும்.

XVII. இதற்கு மேலதிகமாக அமைச்சினால் காலத்திற்குக் காலம் வெளியிடப்படுகின்ற சுற்றறிக்கைகள், வழிகாட்டல்கள் மற்றும் அறிவுரைகளுக்கு அமைய கடமை நடவடிக்கைகளில் ஈடுபடுதல் வேண்டும்.

XVIII. யாராயிம் திடீர் மரண விசாரணை அலுவலரின் சேவை நிறைவடையும் பட்சத்தில் மேற்படி பிரிவுக்கு புதிதாக நியமனம் பெறுகின்ற திடீர் மரண விசாரணை அலுவலருக்கு தம்வசம் உள்ள சகல ஆவணங்களையும் கையளித்தல் வேண்டும். மேலும், யாதாயினும் திடீர் மரண விசாரணை அலுவலர் உயிரிழக்கும் பட்சத்தில் மேற்படி பிரிவுக்கு புதிதாக நியமனம் பெறும் மரண விசாரணை அலுவலர் குறித்த ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

## 05. <u>ஒழுக்கக் கட்டுப்பாடு</u>

I. திடீர் மரண விசாரணை அலுவலர்களின் ஒழுக்காற்று அதிகாரி நீதி அமைச்சின் செயலாளர் ஆவார் என்பதுடன், அவர் வழங்கும் அறிவுரைகள் மற்றும் கட்டளைகளுக்கு அமைய கடமைகளை மேற்கொள்ளல் வேண்டும். நீதி அமைச்சின் செயலாளரின் கட்டளையை புறக்கணிப்பது தொடர்பில் அல்லது கடமையை புறக்கணித்தல் அல்லது பதவியை முறைகேடாகப் பயன்படுத்துவது மற்றும் முறையற்ற விதத்தில் பயன்படுத்துவது தொடர்பாக நீதி அமைச்சுக்கு ஏதேனும் முறைப்பாடு அல்லது தகவல் கிடைக்கும் பட்சத்தில் நீதி அமைச்சின் செயலாளரினால் பெயரிடப்படுகின்ற அரசாங்க அலுவலர் ஒருவரினால் மேற்கொள்ளப்படும் விசாரணையை அடுத்து (விசாரணையை 03 மாத காலப்பகுதிக்குள் நிறைவு செய்தல் வேண்டும்) ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேற்படி விசாரணையின் போது குறித்த குற்றச்சாட்டுக்களுக்கு குற்றவாளியாக்கப்படும் பட்சத்தில் கௌரவ நீதி அமைச்சரின் இணக்கப்பாட்டின் பேரில் திடீர் மரண விசாரணை பதவியிலிருந்து பதவி நீக்கம் செய்வது மேற்கொள்ளப்படும்.

## 07. <u>சேவையை முடிவுறுத்தல்</u>

I. ஒழுக்காற்றுக் காரணங்களின் அடிப்படையில், விசாரணைக்கு உட்பட்டு விளக்கங்களை சமர்ப்பித்து எந்தவொரு சந்தர்ப்பத்திலும் திடீர் மரண விசாரணை அலுவலர் ஒருவரின் சேவையை முடிவுறுத்தும் அதிகாரம் நீதி அமைச்சருக்கு உரித்தாகும்.

II. யாராயினும் திடீர் மரண விசாரணை அலுவலர் ஒருவர் 70 வயதை பூர்த்தி செய்தல்.

III. அரச சேவை / மாகாண அரச சேவை / அரச கூட்டுத்தாபனம் / ஆணைக்குழு அல்லது நியாயாதிக்க சபையொன்றின் பதவியொன்றுக்கு நியமனம் பெறும் சட்டத்தில் அல்லது பாராளுமன்ற உறுப்பினர், மாகாண சபை உறுப்பினர் அல்லது உள்ளூராட்சி மன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்படல்

## 08. திடீர் மரண விசாரணை அலுவலர் அதிகாரப் பிரதேசம்

I. பிரதேச செயலாளர் அதிகாரப் பிரதேசம் மற்றும் வைத்தியசாலையை பிரதிநிதித்துவம் செய்கின்ற வகையில் நிர்ணயிக்கப்படுகின்ற பதவிகள் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 09. சேவைக்கு சமூகமளித்தல்

I. சகல மரண விசாரணை அலுவலர்களும் தமது அதிகாரப் பிரதேசத்துக்கு ஏற்புடையதான நீதவானிடம் அறிக்கையிடல் வேண்டும் என்பதுடன் நீதி அமைச்சின் செயலாளரினால் காலத்திற்குக் காலம் வெளியிடப்படுகின்ற சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு உட்பட்டு கடமை நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

II. மேலும் குறித்த சந்தர்ப்பத்தில் சேவைக்கு சமூகமளிப்பதில் அசௌகரியங்கள் இருப்பின் அதற்காக பதில் கடமையாற்றுவதற்கு மேற்படி பிரிவில் அல்லது அண்மித்த பிரிவைச் சேர்ந்த திடீர் மரண விசாரணை அலுவலரை அதற்காக பெயரிட நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.

## 10. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு லீவுகள்

I. வாராந்த நாட்களிலும் மற்றும் அரசாங்க லீவு நாட்கள் மற்றும் வார இறுதி நாட்களிலும் அலுவலக நேரங்களைப் பொருட்படுத்தாது அவசியத்தன்மையின் அடிப்படையில் சேவையாற்றுவதற்கு சகல மரண விசாரணை அலுவலர்களும் கடமைப்பட்டுள்ளார்கள். ஒரு (01) வாரத்திற்கு மேற்பட்ட காலப்பகுதிக்கு உள்நாட்டு அல்லது வெளிநாட்டு லீவு பெற்றக் கொள்வதற்கு திடீர் மரண விசாரணை அலுவலர்கள் எதிர்பார்ப்பதாயின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு அண்மித்த பிரிவைச் சேர்ந்த திடீர் மரண விசாரணை அலுவலர் ஒருவரின் பெயருடன் குறித்த கோரிக்கையை நீதி அமைச்சிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

## 11. மரண விரணைகளை நடாத்தல்.

I. 1979 இன் 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறை சட்டக் கோவை சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய தாய் மரணங்கள், தற்கொலை செய்துகொண்டதன் மூலம் ஏற்பட்டுள்ள மரணங்கள், ஒரு விலங்கினால் ஏற்படுத்தப்படுகின்ற மரணங்கள், இயந்திரசாதனங்களினால் இடம்பெறுகின்ற மரணங்கள், ஒரு குற்றச் செயல் காரணமாக இடம்பெறுகின்ற மரணங்கள், திடீர் விபத்துக்களினால் இடம்பெறுகின்ற மரணங்கள், குறித்த காரணம் தெரியாத மரணங்கள், இனங்காணப்படாத மரணங்கள் மற்றும் வெளிநாட்டவர்களின் உயிரிழப்பு பற்றிய மரணங்களுக்கு திடீர் மரண விசாரணை நடாத்தப்படல் வேண்டும்.

## 12. இடைக்கால ஏற்பாடுகள்

தற்போது நிரந்தர மற்றும் தற்காலிக அடிப்படையில் கடமையாற்றி வருகின்ற திடீர் மரண விசாரணை அலுவலர்கள் புதிய முறையியலின் கீழ் ஆட்சேர்ப்புச் செய்துகொள்ளப்படும் முதற் தடவையிலேயே விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன், இதன் போது அவர்களின் விருப்பம், தற்போது சேவையாற்றுகின்ற அடிப்படை (தற்காலிக /நிரந்தர) மற்றும் சேவைக் காலத்தை அடிப்படையாகக் கொண்டு பிரிவுகளுக்கு இணைப்புச் செய்யப்படுவார்கள்.

வைத்தியசாலைகளுக்கு நியமனம் செய்யும் போது சேவைசார் அனுபவம் மற்றும் திடீர் மரண விசாரணை டிப்ளோமா சித்தியைப் பெற்றுக் கொண்டிருத்தல் அல்லது பயிற்சி பெற்றுள்ள திடீர் மரண விசாரணை அலுவலர்களுக்கு முன்னுரிமை வழங்கல்.

**13. <u>திடீர் மரண விசாரணை அலுவலர்களின் உத்தியோகபூர்வ உடை</u>**

திடீர் மரண விசாரணையொன்றில் பங்குபற்றும் போது பதவியின் கௌரவத்தைப் பாதுகாக்கக்கூடிய வகையில் தகுந்த உத்தியோகபூர்வ உடையை அணிந்துசெல்வது மிகவும் முக்கியமானதாகும்.

ஐரோப்பிய ஆடையை அணிந்து திடீர் மரண விசாரணை நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற திடீர் மரண விசாரணை அலுவலர்கள் கறுப்பு நிற காற்சட்டை மற்றும் வெள்ளை நிற சேர்ட் (ரை அணிவது) அல்லது வெள்ளை நிறை தேசிய அடையை அணிந்து கடமையில் ஈடுபடுவது உகந்ததாகும்.

பெண் திடீர் மரண விசாரணை அலுவலர்கள் மலைநாட்டு ஒசரி / சீலை சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான ஆடையை அணிந்து கடமையில் ஈடுபடுவது உகந்ததாகும்.